# आत्मनिर्भर भारत

सत्यमेव जयते
Government Of India

## பகுதி-1 : எம்.எஸ்.எம்.இ.கள் உள்ளிட்ட தொழில்கள்

13.05.2020



# பிரதமரின் தொலைநோக்கு திட்டம்

- *தற்சார்பு இந்தியா இயக்கம் அல்லது* **आत्मनिर्भर र्ारत अनर्याि** *க்கான அழைப்பு*

- ***தற்சார்பு இந்தியா திட்டத்தின் ஐந்து தூண்கள்*** *- பொருளாதாரம், கட்டமைப்பு, செயல்பாட்டு முறை, துடிப்பான மக்கள் மற்றும் தேவை.*
- ***ரூ.20 லட்சம் கோடிக்கான சிறப்புப் பொருளாதார மற்றும் விரிவான தொகுப்புத் திட்டங்கள் - இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10சதவீதத்திற்கு*** *இணையானது.*
- *குடிசைத் தொழில்கள், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்கள், நடுத்தர வர்க்கத்தினர், தொழிற்சாலைகள் உள்ளிட்ட* ***பல்வேறு துறைகளுக்கான*** *தொகுப்புத் திட்டங்கள்.*
- *அனைத்துத் துறைகளிலும்* ***துணிச்சலான சீர்திருத்தங்கள்*** *நாட்டின் தற்சார்பை நோக்கிய முன்னெடுப்பாக இருக்கும்.*
- ***உள்நாட்டுப் பொருள்களுக்கு ஆதரவு காட்டி, அவற்றை உலகத் தரமாக*** *ஆக்குவதற்கான தருணம் இது.*



## பிரதமரின் கரீப் கல்யாண் யோஜ்னா (1)

கொரோனா வைரஸ் நோய்த் தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஏழைகளுக்கு உதவுவதற்கு பிரதமரின் கரீப் கல்யாண் யோஜ்னா திட்டத்தின் கீழ் ரூ.1.70 லட்சம் கோடிக்கான நிவாரண திட்டத் தொகுப்பு:

- சுகாதாரப் பணியாளருக்கு தலா ரூ.50 லட்சத்துக்குக் **காப்பீட்டு வசதி.**
- அடுத்த மூன்று மாதங்களுக்கு ஒரு நபருக்கு **5 கிலோ கோதுமை** அல்லது அரிசி வழங்குவதால் 80 கோடி ஏழை மக்களுக்குப் பயன்.
- **ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் மாதம் ஒரு கிலோ** வீதம் அடுத்த 3 மாதங்களுக்கு **பருப்பு** வகைகள் இலவசம்.
- வங்கிகளில் **ஜன் தன் கணக்கு வைத்திருக்கும்** 20 கோடி பெண்களுக்கு . 3 மாதங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.500 கிடைக்கும்.
- 8 கோடி ஏழைக் குடும்பங்களுக்கு 3 மாதங்களுக்கு **இலவச எரிவாயு சிலிண்டர்கள்.**
- **மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில்** ஒரு நாள் **ஊதியம்** ரூ.182-இல் இருந்து ரூ.202 ஆக **உயர்த்தப்பட்டதால்** 13.62 கோடி குடும்பங்களுக்குப் பயன்.
- **ஏழைகள், மூத்த குடிமக்கள், ஏழை விதவையர் மற்றும் ஏழை மாற்றுத் திறனாளிகள்** 3 கோடி பேருக்கு கருணைத் தொகை ரூ.1,000.






# பிரதமரின் கரீப் கல்யாண் திட்டத் தொகுப்பு (2)

- இப்போது அமலில் உள்ள பிரதமரின் கிசான் திட்டத்தின் கீழ் 8.7 கோடி **விவசாயிகளுக்கு** தவணைத் தொகை **ரூ.2,000** முன்கூட்டியே வழங்கப்பட்டது.

- **கட்டடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர் நல நிதியை, தொழிலாளர்களுக்கு நிவாரணம்** வழங்குவதற்குப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

- 100 தொழிலாளர்களுக்கும் கீழ் உள்ள தொழில் நிறுவனங்களில் மாதம் ரூ.15,000-க்கும் கீழ் ஊதியம் பெறுவோருக்கு அடுத்த 3 மாதங்களுக்கான வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளில் **சம்பளத்தில் 24சதவீதம் செலுத்தப்பட்டது.**

- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தில் பதிவு செய்துள்ள 5 கோடி தொழிலாளர்கள் **திருப்பிச் செலுத்தும் கட்டாயம் இல்லாமல் தங்கள் பங்களிப்பில் 75சதவீதம்** அல்லது 3 மாத ஊதியத்தை, இதில் எது குறைவோ அந்தத் தொகையை தங்கள் கணக்கில் இருந்து எடுத்துக் கொள்ள அனுமதி.

- 6.85 கோடி குடும்பங்களுக்கு உதவிகள் அளித்து வரும் **மகளிர் சுய உதவி குழுக்களுக்கு** பிணைத் தொகை இல்லாமல் கடன் வழங்குவதற்கான வரம்பு ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக உயர்வு
- மருத்துவப் பரிசோதனை, மேலோட்டமான பரிசோதனை போன்ற செயல்பாடுகளுக்கு உதவிகரமான செயல்களுக்கு **மாவட்ட கனிம நிதியைப் (District Mineral Fund)** பயன்படுத்தத் திட்டம்.






# மற்ற நடவடிக்கைகள் - 1

**மத்திய அரசின் வேண்டுகோளின்படி, மாநில அரசுகளின் வழிவகைகள் (***Ways and Means)* முன்தொகை வரம்புகளை **60சதவீத அளவுக்கும்**, மேலதிகப் பற்றுக் கால வரம்புகளை அதிகரித்தும் இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

- **ரூ.5 லட்சம் வரையில் வருமான வரி திருப்பிச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகளை** உடனடியாக வழங்கியதில், வரி செலுத்தும் 14 லட்சம் பேர் பயன் பெற்றனர்.
  - நிலுவையில் உள்ள அனைத்து திருப்பிச் செலுத்தல் மற்றும் குறைபாடு கேட்பு விண்ணப்பங்களுக்கு ``**சிறப்பு திருப்பித் தருதல் மற்றும் குறைபாடு களைவு முயற்சியை''** அமல் செய்தது.
  - மேலே குறிப்பிட்ட 2 நடவடிக்கைகள் மூலம் **ரூ.18,000 கோடி** திருப்பி அளிக்கப்பட்டது
  - **அவசரகால சுகாதாரத் தேவைத் தொகுப்புக்கு ரூ.15,000 கோடிக்கு அனுமதி.**



# *மற்ற நடவடிக்கைகள்* – 2

*பின்வருவன போன்ற* ***சட்டப்பூர்வ மற்றும் ஒத்திசைவு விஷயங்களில் தளர்வுகள்*** *அளிக்கப்பட்டன -*

- *வருமான வரிக் கணக்கு தாக்கலுக்கான கடைசி தேதி ஜூன் 30, 2020 வரை நீட்டிப்பு.*
- *சரக்கு மற்றும் சேவை வரி கணக்குத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடு ஜூன் 2020 இறுதி வரையில் நீட்டிப்பு.*
- *30 ஜூன் 2020 வரையில் 24x7 சுங்க அனுமதி.*
- *டெபிட் கார்டு வைத்திருப்பவர்கள் எந்த ஏ.டி.எம்.க்களிலும் கட்டணம் இல்லாமல் பணம் எடுத்துக் கொள்ள 3 மாதங்களுக்கு விதிகள் தளர்வு.*
- *மோட்டார் வாகனம் மற்றும் மருத்துவக் காப்பீட்டுப் காப்பீடுகளுக்கு 15 மே 2020க்கு முன்னதாகப் பணம் செலுத்த அனுமதி.*
- *சட்டபூர்வமாக இயக்குநர்கள் குழு கூட்டத்தை நடத்துவதற்கான அவகாசம் 30 செப்டம்பர் வரையில் 60 நாட்களுக்கு நீட்டிப்பு.*
- *சிறப்பு ஜெனரல் கூட்டங்களை இ-வாக்களிப்பு/ எளிமைப்படுத்திய வாக்களிப்பு வசதியுடன் காணொளி மூலம் நடத்த அனுமதி.*



# இந்திய ரிசர்வ் வங்கி எடுத்த நடவடிக்கைகள்

- ரொக்கக் கையிருப்பு விகித (சி.ஆர்.ஆர்.) அளவைக் குறைத்ததால் **ரூ.1,37,000 கோடி** ரொக்கம் அதிகரிப்பு.
- புதிய முதலீட்டு கிரேடு கார்ப்பரேட் பத்திரங்கள், வணிக ஆவணம், மாற்றம் செய்ய முடியாத கடன் பத்திரங்களுக்காக **ரூ.1,00,050 கோடிக்கு இலக்கு நோக்கிய நீண்ட கால ரெப்போ செயல்பாடுகள் (**Targeted Long Term Repo Operations - **TLTRO**) அனுமதி.
- **ரூ.50,000 கோடி இலக்கு நோக்கிய நீண்ட கால ரெப்போ செயல்பாடுகள்** பணத்தை வங்கிச் சேவை அல்லாத நிதி நிறுவனங்கள், நுண் நிதி நிறுவனங்களின் முதலீட்டு கிரேடு கார்ப்பரேட் பத்திரங்கள், வணிக ஆவணம், மாற்றம் செய்ய முடியாத கடன் பத்திரங்களில் முதலீடு செய்தல்.
- எம்.எஸ்.எப். நடைமுறையின் கீழ், **வங்கிகளின் கடன் வாங்கும் வரம்பு** அதிகரிப்பு காரணமாக, குறைந்த எம்.எஸ்.எப். அளவில் **கூடுதலாக ரூ.1,37,000 கோடி** வங்கி செயல்பாடுகளுக்கு கிடைத்தது.



# இந்திய ரிசர்வ் வங்கி எடுத்த நடவடிக்கைகள்

- பாலிசி ரெப்போ விகிதத்தில் **ரூ.50,000 கோடிக்கு  தேசிய வேளாண் , ஊரக வளர்ச்சி வங்கி (**National Bank for Agriculture and Rural Development - **NABARD**) **இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (**Small industrial Development Bank of India - **SIDBI**) **தேசிய வீட்டு வசதி வங்கி (National Housing Bank –NHB)  ஆகியவற்றிற்கு சிறப்பு மறுநிதியளிப்பு** வசதிகள் அறிவிப்பு.

- பணமாக்கும் நிலை அதிகரித்ததால் ஏற்பட்ட நெருக்கடியை பரஸ்பர நிதி நிறுவனங்கள் சமாளிக்க, **ரூ.50,000 கோடி எஸ்.எல்.எப்.** தொடங்க அறிவிப்பு.

- **அனைத்து நீண்டகாலக் கடன்களுக்கும்** செயல்பாட்டு மூலதன வசதிகளுக்கு **வட்டி செலுத்துதல் மற்றும் தவணைகள் செலுத்துவதற்கு 3 மாத கால அவகாசம்**

- வரம்புகள் குறைப்பின் மூலம் **செயல்பாட்டு மூலதன கடன் விதிகளைத் தளர்த்துதல்.**

- ரியல் எஸ்டேட் துறைகளுக்கு வங்கி சாரா நிதி நிறுவனங்கள் அளித்துள்ள கடன்களைப் பொருத்தவரை **வணிக செயல்பாடுகளைத் தொடங்குவதற்கான அவகாசம் கூடுதலாக ஓராண்டு காலம்** நீட்டிப்பு.



# குறு,சிறு,நடுத்தரத் தொழில்கள் உள்ளிட்ட தொழில்கள்

1. குறு,சிறு,நடுத்தரத் தொழில்கள் உள்ளிட்ட தொழில்களுக்குத் தானாக செயல்படும் நடைமுறையில் ரூ.3 லட்சம் கோடி அளவுக்கு உத்தரவாதம் காட்டாத நிலையில் கடன் வசதி
2. குறு,சிறு,நடுத்தரத் தொழில்களுக்கு ரூ.20,000 கோடிக்கு துணைக் கடன் திட்டம்
3. குறு,சிறு,நடுத்தரத் தொழில் நிதியம் மூலமாக ரூ.50,000 கோடி ஈவுத்தொகை அளிப்பு
4. குறு,சிறு,நடுத்தரத் தொழில் களுக்கு புதிய வரையறை
5. ரூ.200 கோடி வரையிலான கொள்முதல்களுக்கு உலகளாவிய விலைப்புள்ளி கிடையாது
6. குறு,சிறு,நடுத்தரத் தொழில் களுக்கு இதர தலையீட்டு வசதிகள்
7. தொழில் நிறுவனங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் 3 மாதங்களுக்கு தொழிலாளர் நல நிதிப் பங்களிப்புக் குறைப்பு - ரூ.6750 கோடி
8. என்.பி.எப்.சி./ எச்.சி./ எம்.எப்.ஐ.களுக்கு பணம் பெறும் வசதிக்கு ரூ.30,000 கோடி
9. என்.பி.எப்.சி.களுக்கு ரூ.45,000 கோடி பகுதியளவு கடன் உத்தரவாதத் திட்டம் 2.0
10. மின் விநியோக நிறுவனங்களுக்கு ரூ.90,000 கோடி ரொக்கம் கிடைக்கும் வசதி
11. ஒப்பந்ததாரர்களுக்கு நிவாரணம்
12. RERA-வின் கீழ் ரியல் எஸ்டேட் பணிகளுக்குப் பதிவு செய்தல் மற்றும் நிறைவு செய்தல் கெடு நீடிப்பு
13. TDS/TCS குறைப்புகள் மூலம் ரூ.50,000 கோடி நிதிப் புழக்கம்
14. மற்ற நேரடி வரி நடவடிக்கைகள்
15. மற்ற நேரடி வரி நடவடிக்கைகள்

## குறு, சிறு, நடுத்தரத்தொழில்கள் உள்ளிட்ட தொழில்களுக்குத் தானாக செயல்படும் நடைமுறையில் ரூ.3 லட்சம் கோடி அளவுக்கு உத்தரவாதம் காட்டாத நிலையில் கடன் வசதி

- *கோவிட்-19 பாதிப்பால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தொழில்கள்/ எம்.எஸ்.எம்.இ.களுக்கு சேர்ந்துவிட்ட சுமைகளை சமாளிக்கவும், மூலப்பொருள்கள் வாங்கி மீண்டும் தொழில் தொடங்கவும் கூடுதல் நிதி வசதி தேவைப்படுகிறது.*
- ***முடிவு: தொழில்கள் / எம்.எஸ்.எம்.இ.களுக்கு வங்கிகள் மற்றும் என்.பி.எப்.சி.களிடம் இருந்து 29.2.2020ல் ஒட்டுமொத்த நிலுவையில் 20% வரையில் அவசரகால கடன் வசதி அளித்தல்***
  - *ரூ.25 கோடி நிலுவை வைத்துள்ள, ரூ.100 கோடி விற்றுமுதல் உள்ள கடனாளிகள் இதற்குத் தகுதி பெறுவார்கள்.*
  - *4 ஆண்டு காலம் கடன் தவணை உள்ள, அசல் தொகையை செலுத்த 12 மாதங்கள் அவகாசம் உள்ள கடன்கள்.*
  - ***வட்டிக்கு வரம்பு நிர்ணயம்.***
  - ***அசல் மற்றும் வட்டிக்கு*** *வங்கிகள் மற்றும் என்.எப்.சி.களுக்கு* ***100% கடன் உத்தரவாத வசதி.***
  - ***31 அக்டோபர் 2020 வரையில்*** *இத் திட்டத்தில்* ***பயன் பெறலாம்.***
  - ***உத்தரவாதக் கட்டணம் கிடையாது, புதிய பிணை கிடையாது.***
- ***45 லட்சம் தொழில் பிரிவுகள்*** *தொழில் செயல்பாடுகளைத் தொடங்கி, வேலைவாய்ப்புகளுக்கு உத்தரவாதம் அளிக்கும்.*



**நெருக்கடியில் உள்ள குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு *20,000* கோடிக்கு துணைக் கடன் திட்டம்**

- *நெருக்கடியில் உள்ள* **குறு, சிறு, நடுத்தரத் தொழில்***களுக்கு பங்களிப்பு உதவி தேவைப்படுகிறது.*
- *மத்திய அரசு* **ரூ.*20,000* கோடி** *துணைக் கடன் அளிக்க ஏற்பாடு செய்யும்.*
- **இரண்டு லட்சம் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள்** *பயன்பெறும்.*
- **என்.பி.ஏ. அல்லது நெருக்கடியில் உள்ள** *செயல்பாட்டில் உள்ள* **குறு, சிறு, நடுத்தரத் தொழில்***கள் தகுதி பெறும்.*
- CGTMSE-*க்கு அரசு* **ரூ.*4,000* கோடி** *உதவி அளிக்கும்.*
- **வங்கிகளுக்கு பகுதியளவு கடன் உத்தரவாதங்களை** *CGTMSE அளிக்கும்.*
- **குறு, சிறு, நடுத்தரத் தொழில்** *நடத்துபவர்களுக்கு வங்கிகள் கடன் தரும், அது அந்தத் தொழில் பிரிவில் பங்குத் தொகையாக அவரால் செலுத்தப்படும்.*





# குறு, சிறு, நடுத்தரத் தொழில் **நிதியம் மூலமாக ரூ.50,000 கோடி பங்குகள் அளிப்பு**

- **குறு, சிறு, நடுத்தரத் தொழில்** நிதியம் மூலமாக ரூ.50,000 கோடி ஈக்விட்டி அளிப்பு
- **குறு, சிறு, நடுத்தரத் தொழில்**களுக்கு பங்களிப்புத் தொகைக்கு கடும் நெருக்கடி உள்ளது
- **ரூ.10,000 கோடி தொகுப்பு நிதியுடன்** நிதியங்களுக்கான நிதியம் உருவாக்கப்படும்
- **வளர்ச்சி வாய்ப்பு மற்றும் சாத்தியக்கூறு** உள்ள **குறு, சிறு, நடுத்தரத் தொழில்**களுக்கு இதில் பங்களிப்பு நிதி அளிக்கப்படும்.
- **தாய் நிதி** மற்றும் சில **மகள் நிதியங்கள்** மூலம் எப்.ஓ.எப். செயல்படுத்தப்படும்.
- **மகள் நிதியங்களின் நிலையில் ரூ.50,000 கோடி அளவுக்கு நிதி பெறுவதற்கு நிதியக் கட்டமைப்பு உதவிகரமாக இருக்கும்**
- **குறு, சிறு, நடுத்தரத் தொழில்களின்** அளவையும், திறனையும் அதிகரிக்க உதவிகரமாக இருக்கும்.
- **குறு, சிறு, நடுத்தரத் தொழில் கள் பங்குப் பரிவர்த்தனைப் பட்டியலில் இடம் பெற ஊக்குவிப்பதாக** இருக்கும்



## குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு புதிய வரையறை

- **குறு, சிறு, நடுத்தரத் தொழில்** வரையறையில் குறைவான எல்லைகள் நிர்ணயிப்பதால், பயன்களைப் பெறும் நிலையை எட்ட முடியாமல் போகுமோ என்ற அச்சம் உருவாகி, வளரும் உத்வேகம் தடைபடுகிறது
- இவற்றை திருத்தியமைக்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாக உள்ளது
- **அறிவிப்புகள்:**
    - **குறு, சிறு, நடுத்தரத் தொழில்**களுக்கான வரையறை மாற்றி அமைக்கப்படும்
    - **முதலீட்டு வரம்புகள் உயர்த்தப்படும்**
    - **விற்றுமுதல் அளவுக்கு கூடுதல் வரம்புகள்** அறிமுகம் செய்யப்படும்.
    - உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு இடையிலான பிரிவினைகள் நீக்கப்படும்.
    - தேவையான **சட்டத் திருத்தங்கள்** செய்யப்படும்.



## குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு இப்போதைய மற்றும் புதிய வரையறைகள்

Government Of India

| இப்போதைய குறு, சிறு, நடுத்தரத் தொழில்களின் வகைப்பாடு | | | |
|---|---|---|---|
| வரன்முறை: உற்பத்தி நிலையம் & இயந்திரங்கள் அல்லது சாதனங்களில் முதலீடு | | | |
| **வகைப்பாடு** | குறு | சிறு | நடுத்தரம் |
| உற்பத்தி நிறுவனங்கள் | முதலீடு < ரூ. 25 லட்சம் | முதலீடு < ரூ. 5 கோடி | முதலீடு < ரூ. 10 கோடி |
| சேவைகள் நிறுவனம் | முதலீடு < ரூ. 10 லட்சம் | முதலீடு < ரூ. 2 கோடி | முதலீடு < ரூ. 5 கோடி |

| திருத்தப்பட்ட குறு, சிறு, நடுத்தரத் தொழில் வகைப்பாடு | | | |
|---|---|---|---|
| ஒட்டுமொத்த வரன்முறை : முதலீடு மற்றும் ஆண்டு விற்றுமுதல் | | | |
| **வகைப்பாடு** | குறு | சிறு | நடுத்தரம் |

| | | | |
|---|---|---|---|
| உற்பத்தி & சேவைகள் | முதலீடு < ரூ. **1** கோடி<br>மற்றும்<br>**விற்றுமுதல்** < ரூ. **5** கோடி | முதலீடு < ரூ. **10** கோடி<br>மற்றும்<br>**விற்றுமுதல்** < ரூ. **50** கோடி | முதலீடு < ரூ. **20** கோடி<br>மற்றும்<br>**விற்றுமுதல்** < ரூ. **100** கோடி |

**ரூ.200 கோடி வரையிலான கொள்முதலுக்கு உலகளாவிய விலைப்புள்ளி கிடையாது**

- இந்திய **குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்** மற்றும் பிற கம்பெனிகள் எப்போதும் வெளிநாட்டு நிறுவனங்களின் நியாயமற்ற போட்டியை எதிர்கொள்ள முடியாத நிலை உள்ளது.

- **எனவே, ரூ.200 கோடி வரையில் அரசு கொள்முதல் செய்வதற்கான விஷயங்களில் உலகளாவிய விலைப் புள்ளிகள் கோரப்படாது.**

- **பொது நிதி விதிமுறைகளில் தேவையான திருத்தங்கள்** செய்யப்படும்

- இது **தற்சார்பு இந்தியா (आत्मनिर्भर भारत)** இயக்கத்தை நோக்கியதாகவும், **மேக் இன் இந்தியா** திட்டத்தை ஆதரிப்பதாகவும் இருக்கும்

- **குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்** தங்கள் வியாபாரத்தை அதிகரிக்கவும் இது உதவிகரமாக இருக்கும்.



**குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு இதர தலையீட்டு வசதிகள்**

- கோவிட் காரணமாக இப்போது **குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்** மார்க்கெட்டிங் மற்றும் பணமாக்கலில் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன
- வர்த்தகக் கண்காட்சிகளுக்குப் பதிலாக **குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இ- மார்க்கெட் தொடர்புகள்** ஊக்குவிக்கப்படும்.
- **இ-மார்க்கெட் இடங்களில் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி பரிவர்த்தனை அடிப்படையிலான கடன்களை உயர்த்த** *Fintech* பயன்படுத்தப்படும்.
- அரசு மற்றும் மத்திய பொதுத் துறை நிறுவனங்கள் **குறு, சிறு, நடுத்தரத் தொழில்** களுக்குப் பணம் அளிப்பதை அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.
- **அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களிடம் இருந்து குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு 45 நாட்களில் பணம் வழங்கப்படுகிறது**



**தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு மேலும் 3 மாத காலத்துக்கு ரூ.2500 கோடி அளவுக்கு தொழிலாளர் சேம நல நிதி ஆதரவு**

- *தொழில் நிறுவனங்கள் மீண்டும் செயல்படத் தொடங்கும்போது நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும்.*
- *பிரதமரின் கரீப் கல்யாண் உதவித் தொகுப்புகள் திட்டத்தின் கீழ் தகுதியுடைய நிறுவனங்களுக்கு முதலாளியின் 12சதவீதம் மற்றும் தொழிலாளியின் 12 சதவீதப்பங்களிப்புகள் தொழிலாளர் சேமநலநிதிக் கணக்குகளில் செலுத்தப்பட்டன*
- *2020 மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான ஊதியத்துக்கு இந்த நிதி அளிக்கப்பட்டது.*
- ***இந்த உதவி 2020 ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய அடுத்த 3 மாதங்களுக்கு நீட்டிக்கப் படுகிறது.***
- *இது 3.67 லட்சம் நிறுவனங்களுக்கு* ***ரூ.2500 கோடி*** *அளவுக்கு பணம் கிடைக்க உதவியாக இருக்கும். 72.22 லட்சம் தொழிலாளர்கள் பயன்பெறுவர்.*

**தொழில்கள், பணியாளர்களுக்கான வருங்கால வைப்பு நிதி பங்களிப்பு மூன்று மாதங்களுக்குக் குறைக்கப்பட்டது- ரூ. 6750 கோடி நிதி ஆதரவு.**

* அடுத்த காலாண்டில் உற்பத்தியை அதிகரிக்க தொழில்களுக்கு ஆதரவு தேவை.

*பணியாளர்கள் வீட்டுக்கு எடுத்துச்செல்லும் ஊதியத்தை அதிகப்படுத்துவதும், முதலாளிகளுக்கு வருங்கால வைப்பு நிதி செலுத்துவதில் இருந்து நிவாரணம் அளிப்பதும் அவசியமாகும்.

* அதனால், வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் இணைந்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும், தற்போதுள்ள 12 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக முதலாளி மற்றும் பணியாளர் செலுத்த வேண்டிய சட்டப்பூர்வ வருங்கால வைப்பு நிதிப் பங்களிப்பு குறைக்கப்படும்.

* ஆனால், மத்திய பொதுத் துறை நிறுவனங்களும், மாநில பொதுத் துறை நிறுவனங்களும் அதே 12 சதவீதத்தை வேலையில் அமர்த்துபவர் பங்காக செலுத்தும்.

* பிரதமரின் ஏழைகள் மறுவாழ்வுத் திட்டம் மற்றும் அதன் நீட்டிப்பின் கீழ் 24 சதவீத வருங்கால வைப்பு நிதி ஆதரவுக்குத் தகுதி பெறாத பணியாளர்களுக்கு இந்தத் திட்டம் பொருந்தும்.

* வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் இணைந்துள்ள 6.5 லட்சம் நிறுவனங்களுக்கும், சுமார் 4.3 கோடி பணியாளர்களுக்கும் இது நிவாரணம் அளிக்கும்.

* முதலாளிகளுக்கும், பணியாளர்களுக்கும் ரூ 6750 கோடி நிதி நிவாரணத்தை அடுத்த 3 மாதங்களுக்கு இது அளிக்கும்.

**வங்கி** சாரா **நிதி நிறுவனங்கள்/**வீட்டுக் **கடன் நிறுவனங்கள்/ சிறு கடன் நிறுவனங்களுக்கு** ரூ **30,000** கோடி சிறப்பு நிதித் **திட்டம்.**

* கடன் சந்தைகளில் நிதியைத் திரட்ட வங்கி சாராத நிதி நிறுவனங்கள்/வீட்டுக் கடன் நிறுவனங்கள்/சிறு கடன் நிறுவனங்கள் ஆகியவை சிரமப்படுகின்றன.

*  ரூ 30,000 கோடி சிறப்பு நிதித் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்துகிறது.

* வங்கி சாரா நிதி நிறுவனங்கள்/வீட்டுக் கடன் நிறுவனங்கள்/சிறு கடன் நிறுவனங்களின் முதலீட்டு தரத்திலான கடன் பத்திரத்தில் அடிப்படை மற்றும் இரண்டாம் நிலை சந்தை பரிவர்த்தனைகளில் இந்தத் திட்டத்தின் கீழ் முதலீடு செய்யப்படும்.

* நிதி ஓட்டத்தைப் பெருக்குவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி/அரசின் நடவடிக்கைகளுக்கு இது துணை நிற்கும்.

* பத்திரங்களுக்கு இந்திய அரசு முழு உத்தரவாதம் அளிக்கும்.

*  வங்கி சாரா நிதி நிறுவனங்கள்/வீட்டுக் கடன் நிறுவனங்கள்/சிறு கடன் நிறுவனங்கள் மற்றும் பரஸ்பர நிதிகளுக்கு இது நிதி ஆதரவை அளிக்கும்.

**வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கு ரூ 45,000 கோடி பகுதிக் கடன் உத்தரவாத திட்டம் 2.0**

* சிறு, குறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு புதிய கடன்களை அளிக்க குறைவான கடன் மதிப்பீடுகளோடு உள்ள வங்கி சாரா நிதி நிறுவனங்கள், வீட்டுக் கடன் நிறுவனங்கள் மற்றும் சிறு கடன் நிறுவனங்களுக்கு நிதி தேவைப்படுகிறது.

* இப்படிப்பட்ட நிறுவனங்களுடைய பத்திரங்களின் முதன்மை வெளியீடு/கடன் காலம் (இருப்பு நிலைக்குறிப்புகளின் கடன்பாடுப் பகுதி) போன்ற கடன் வாங்கல்களுக்காக நடைமுறையில் உள்ள பகுதிக் கடன் உத்தரவாத திட்டம் நீட்டிக்கப்படுகிறது.

* நஷ்டத்தின் முதல் 20 சதவீதம், உத்தரவாதம் அளிப்பவரால், அதாவது, இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்படும்.

* ஏஏ பத்திரம் மற்றும் அதற்கு குறைவான மதிப்பிடப்படாத பத்திரம் முதலீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்படும் (பல சிறு கடன் நிறுவனங்களுக்கு குறிப்பாகப் பொருந்தும்).

* ரூ 45,000 கோடி நிதி ஓட்டத்துக்கு இந்தத் திட்டம் வழிவகுக்கும்.

**மின் விநியோக நிறுவனங்களுக்கு ரூ 90,000 கோடி நிதி உட்செலுத்தல்**

* மின் விநியோக நிறுவனங்களின் வருவாய் சரிந்துள்ளது.

* தேவைக் குறைவின் காரணமாக வரலாறு காணாத நிதி ஓட்டச் சிக்கல்.

* மின் உற்பத்தி மற்றும் பகிர்மான நிறுவனங்களுக்கு மின் விநியோக நிறுவனங்கள் தற்சமயம் செலுத்த வேண்டிய தொகை- ரூ 94,000 கோடி.

* மின் விநியோக நிறுவனங்களுக்கு ரூ 90,000 கோடி நிதியை பெறத்தக்கவைகளின் பெயரில் PFC/REC உட்செலுத்தும்.

* மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு மின் விநியோக நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொகைகளுக்காக மட்டும் அரசு உத்தரவாதத்தின் பெயரில் கடன்கள் அளிக்கப்படும்.

* குறிப்பிட்ட நடவடிக்கைகள்/சீர்திருத்தங்களுடன் தொடர்பு: நுகர்வோர்களுக்கு மின் விநியோக நிறுவனங்களின் டிஜிட்டல் பணம் செலுத்தும் வசதி, மாநில அரசுகளின் நிலுவையில் உள்ள தொகைக்களுக்கான நிதி, நிதி மற்றும் செயல்பாட்டு நஷ்டங்களைக் குறைக்கத் திட்டம்.

* மின் விநியோக நிறுவனங்களுக்கு மத்திய பொதுத் துறை மின் உற்பத்தி நிறுவனங்கள் தள்ளுபடியை வழங்கும். இறுதி நுகர்வோருக்கு (தொழில்கள்) இந்த நன்மைக் கொண்டு செல்லப்படும்.

**ஒப்பந்ததாரர்களுக்கு நிவாரணம்**

* 6 மாதங்களுக்கு நீட்டிப்பை (ஒப்பந்தக்காரர்களுக்கு செலவுகள் இல்லாமல்) அனைத்து மத்திய முகமைகளும் வழங்கும் (ரயில்வே, சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், மத்திய பொதுப்பணி அமைச்சகம் மற்றும் பல)

* கட்டுமானம்/பணிகள் மற்றும் பொருள்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்களை உள்ளடக்கும்.

* பணி முடித்தல், இடைநிலை மைல்கல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும், மற்றும் பொதுத்துறை, தனியார் பங்குபெறும் ஒப்பந்தங்களில் சலுகைக் காலம் நீட்டிப்பு.

* நிதி ஓட்டத்தை எளிதாக்குவதற்காகவும், ஒப்பந்தங்களை ஓரளவுக்கு முடிக்கவும் வங்கி உத்தரவாதங்களை அரசு முகமைகள் பகுதியாக வெளியிடும்

**ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம்** (*Real Estate Regulatory Authority*, - RERA) **ரியல் எஸ்டேட் பணிகளுக்கு பதிவு மற்றும் முடிவுறும் தேதிகளை நீட்டிக்கும்.**

* கொவிட் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்பால் RERA விதித்துள்ள கெடுக்களை மீறும் ஆபத்தில் பணிகள் உள்ளதால், காலக்கெடுக்கள் நீட்டிக்கப்படும்.

* கீழ்கண்டவை குறித்து மாநிலங்களுக்கும்/யூனியன் பிரதேசங்களுக்கும் வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகம் அறிவுறுத்தும்:

* கொவிட்-19ஐ தடுக்கமுடியாத வலுக்கட்டாய நிலையாக (‘Force Majeure’) ரெராவின் கீழ் கருத வேண்டும்.

* மார்ச் 25, 2020 அல்லது அதற்கு பிறகு காலாவதியாகும் அனைத்து பதிவு செய்துள்ள திட்டங்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பம் இல்லாமலேயே தாமாக முன்வந்து பதிவு மற்றும் முடிவுறும் தேதிகளை 6 மாதங்களுக்கு நீட்டித்தல்.

* தேவை ஏற்பட்டால், ஒழுங்குமுறை அதிகாரிகள் இதை இன்னும் 3 மாதங்களுக்கு நீட்டிக்கலாம்.

* மாற்றியமைக்கப்பட்ட காலக்கெடுக்களுடன் புதிய 'திட்டப் பதிவு சான்றிதழ்களை' தாமாக அளித்தல்.

* ரெராவின் கீழ் ஒரே நேரத்தில் பல்வேறு சட்டப்பூர்வ நடைமுறைகளின் காலக்கெடுக்களை நீட்டித்தல்.

* ரியல் எஸ்டேட் தொழிலில் உள்ளவர்களின் சுமைகளை இந்த நடவடிக்கைகள் குறைப்பதோடு, வேலைகள் முடிவதையும் உறுதி செய்யும். இதன் மூலம், புதிய காலக்கெடுக்களோடு தாங்கள் பதிவு செய்துள்ள வீடுகளை வீடு வாங்குவோர் பெறுவார்கள்.

**வரி பிடித்தங்களின் விகிதத்தை குறைப்பதன் மூலம் ரூ 50,000 கோடி நிதி ஓட்டம்**

* வரி செலுத்துவோரின் கையில் அதிக பணம் உள்ளதை உறுதி செய்வதற்காக, குடிமக்களுக்கு வழங்கப்படும் சம்பளம் இல்லாத குறிப்பிட்ட கட்டணங்களுக்கான வரி பிடித்தம் (TDS) மற்றும் குறிப்பிட்ட ரசீதுகளுக்கான மூலத்தில் இருந்து வசூலிக்கப்படும் வரி (TCS) ஆகியவை தற்போதுள்ள விகிதங்களில் இருந்து 25சதவீதம் குறைக்கப்படும்.

* ஒப்பந்தங்கள், தொழில் கட்டணம், வட்டி, வாடகை, ஈவுத்தொகை, தரகுத்தொகை ஆகியவற்றின் கட்டணங்கள் குறைக்கப்பட்ட வட்டி விகிதத்துக்கு பொருந்தும்

* 2020-21 நிதி ஆண்டின் மிச்சமுள்ள காலத்துக்கு, அதாவது நாளையில் இருந்து 31 மார்ச், 2020 வரை, இந்த குறைக்கப்பட்ட விகிதம் அமலில்

இருக்கும்.

* இந்த நடவடிக்கை ரூ 50,000 கோடி நிதி ஓட்டத்தை வெளியிடும்.

**இதர நேரடி வரி நடவடிக்கைகள்**

* தொண்டு அறக்கட்டளைகள், பெறு நிறுவனம் அல்லாத தொழில்கள், தனி உரிமையாளர், கூட்டுத்தொழில், LLP மற்றும் கூட்டுறவு உட்பட்ட தொழில்களுக்கு நிலுவையில் உள்ள அனைத்து திருப்பி செலுத்த வேண்டியத் தொகைகளும் உடனடியாக வழங்கப்படும்.

* 2019-20 நிதியாண்டுக்கான வருமான வரிப் படிவங்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 31 ஜூலை, 2020 & 31 அக்டோபர், 2020இல் இருந்து 30 நவம்பர், 2020க்கு நீட்டிக்கப்படும். வரித் தணிக்கைக்கான கெடு 30 செப்டம்பர், 2020இல் இருந்து 31 அக்டோபர், 2020க்கு நீட்டிக்கப்படும்.

**இதர நேரடி வரி நடவடிக்கைகள்**

* 30 செப்டம்பர், 2020 அன்று முடிவடையும் மதிப்பீடுகளுக்கான தேதி 31 டிசம்பர், 2020க்கு நீட்டிக்கப்படும். 31 மார்ச், 20201 அன்று முடிவடைபவை, 30 செப்டமர், 2021 வரை நீட்டிக்கப்படும்.

* கூடுதல் கட்டணம் இல்லாமல் செலுத்துவதற்கான 'விவாத் சே விஷ்வாஸ்' திட்டத்தின் காலம் 31 டிசம்பர், 2020 வரை நீட்டிக்கப்படும்.

நன்றி